WORLD SAIVA COUNCIL (AUSTRALIA) INC.
உலக சைவப் பேரவை (அவுஸ்திரேலியா)
Postal Address: 6, Dudley Street, Auburn, NSW 2144
Tel: 0408 432 680 email: sabanathank@gmail.com

தமிழ் மொழி/யாப்பு இலக்கண வகுப்பு-22

ஆசிரியர்: சைவப்புலவர் முரு.சேமகரன்

(கவிஞர் கல்லோடைக் கரன்)

22-04-2026

தமிழ் மொழி/யாப்பு இலக்கண வகுப்பு-22, 22-04-2026

தொல்:சொல்: இயல்-4, விளிமரபு

'விளி' என்றது **விளித்தலைக்** குறிக்கும். **விளித்தல்** அழைத்தல் எனப் பொருள் கோடலாம். **'மரபு'** என்றது தமிழ் கூறும் நல்லுலகில் ஆதிமுதல் நிலவி வந்த பண்பாடுகளையும், பழக்க வழக்கங்களையும் குறித்து நின்றது.

இதுவரை **7 வேற்றுமை**களையும், அவை கொண்ட **உருபு**களையும் விளக்கி வந்த தொல்காப்பியர், **வேற்றுயியலிலும்**, **வேற்றுமை மயங்கியலிலும்** கூறாது விட்ட **எட்டாம் வேற்றுமை** இங்கு தனியே ஒரு இயலிலே விளக்குகிறார். இதில் 37 நூற்பாக்கள் மட்டுமே உள.

தமிழ் மொழி/யாப்பு இலக்கண வகுப்பு-22, 22-04-2026
தொல்:சொல்: இயல்-4, விளிமரபு

1 எட்டாம் வேற்றுமைக்கும், முதலாம் வேற்றுமை போல, உருபு கிடையாது.

இவ் விளி வேற்றுமை இரண்டு வகை :

அண்மை விளி, சேய்மை விளி.

"விளியெனப் படுவ கொள்ளும் பெயரொடு
தெளியத் தோன்றும் இயற்கைய வென்ப" (118)

இ-ள்:

விளியென்று சொல்லப்படுவன, தம்மை ஏற்கும் பெயரோடு விளங்கத் தோன்றும் இயல்புடையவென்று சொல்வர் ஆசிரியர் எ-று

விளி வேற்றுமை பெயராலே விளங்கும். ஈறு திரிதலும், ஈற்றயல் நீடலும், பிறிது வந்தடைதலும் இயல்பாம் என்றார். வெற்றே விளிக்காமல், குறித்து விளிப்பதே விளி என்றறிக.

"கொள்ளும் பெயர்" என்று குறித்ததனால், 'கொள்ளாப் பெயரும்' உண்டென்று கொள்க.

2 இங்கு உயர்திணைப் பெயர்கள் விளியேற்கும் உயிரீறுகள் எவை எனக் குறிக்கிறார்.

"அவைதாம்; இ உ ஐ ஓ வென்னுமிறுதி
அப்பால் நான்கே உயர்திணை மருங்கின்
மெய்ப்பொருள் சுட்டிய விளிகொள் பெயரே"(120)

இ-ள்:

பெயர் தாம் இ உ ஐ ஓ எனும் இறுதியை உடைய நான்கு பெயரும் உயர்திணைப் பெயருள் விளி கொள்ளும் பெயர் எ-று

"அவற்றுள் இ ஈயாகும், ஐ ஆய் ஆகும்" என்பது சூத்திரம் 121 உரைப்பதாம்.

எ-டு: நம்பி - நம்பீ (இங்கு இ ஈயானது)

நங்கை - நங்காய் (இங்கு ஐ ஆய் ஆனது)

மேலும் ஈறு திரிந்தமையும், ஈற்றயல் நீண்டமையும், பிறிது வந்ததும் கண்டு கொள்க.

மேலும் "ஓவும் உவ்வும் ஏயொடு சிவணும்" (122)

இ-ள்: ஓ என்ற உயிரும், உ என்ற உயிரும் விளிக்கும் போது ஏகாரத்துடன் இணையும் எ-று

எ-டு:

கோ - கோவே (இங்கு ஓ ஏயுடன் சிவணியது)

வேந்து - வேந்தே (இங்கு உ ஏயுடன் சிவணியது)

" .....ஏவல்கொளு மிந்த்ர லோக வசீகர அலங்க்ருத ஆகர ராசதம் அறிந்த கோமள வடிவோனே!"

(வடிவோனே - ஓ ஈறு ஏயொடு சிவணியது)

" .....பேதை பயில் கின்ற ஆறிரு தோளுடைய கந்தனே வயலியில் வாழ்வே "

(வாழ்வே - உ ஈறு ஏயொடு சிவணியது)

மேலும் உகரவீறு ஏயொடு சிவணுகின்ற விளி வேற்றுமையை திருவிசைப்பாவிலே காணலாம் :

"ஒளிவளர் விளக்**கே** உலப்பிலா ஒன்**றே** !
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்**வே** !
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்**றே** !
சித்தத்துள் தித்திக்கும் தே**னே** !
அளிவளர் உள்ளத்(து) ஆனந்தக் கனி**யே** !
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்**பே**. 1 - **(திருமாளிகைத்தேவருளியது)**

3 இவ் விளி வேற்றுமை அளபெடை கொள்ளும் போது எவ்வாறியலும்?

"அளபெடை மிகூஉம் இகர இறுபெயர் இயற்கைய வாகும் செயற்கைய வென்ப" (125)

இ-ள்:

அளபெடை தன்னியல்பு மாத்திரையின் மிகுந்து, நான்கும் ஐந்தும் மாத்திரை பெற்று நிற்கும் இகரவீற்றுப் பெயர், இ ஈ ஆகாது இயல்பாய் விளி ஏற்கும் செய்கையை உடையவாம் எ-று

எ-டு:

தோழீஇ -- தோழீஇஇ, தோழீஇஇஇ.

4

இவ்வாறு வருகின்ற விளிகள் 'சேய்மை விளி' கள் ஆகும். ஆயின் அண்மை விளி இயல்பாக நின்றிலங்கும்.

"அண்மைச் சொல்லே இயற்கை யாகும்" (127)

எ-டு:

நம்பி வாழி, வேந்து வாழி, நங்கை வாழி, கோ வாழி.

(இங்கு இ உ ஐ ஓ நான்கும் இயல்பாய் வந்தமை காண்க.

5 மேலும் சில விளிமரபுகளைச் சுருக்கி நோக்குவோம் :

அன்னை - அன்னா
அத்தை - அத்தா
அன் ஈறு ஆவாகும் (சோழன் - சோழா)

அன் ஈறு அண்மை விளியில் அகரமாகும்.
(தலைவன் - தலைவ, இறைவன் - இறைவ

முறைப் பெயர் ஏகார விளியேற்கும். (மகன் - மகனே, மகள் -மகளே)

தான், யான், யாவன், சுட்டு முதல்கள் என்பன விளியேலாப் பெயர்கள்.

அர், ஆர் என்ற இரண்டும் ஈர் என்ற விளியேற்கும்.

(பார் - பாரீர், கூத்தர் - கூத்தீர், நல்லர் - நல்லீர்)

புள்ளியீறும், உயிரீறுமாகிய அஃறிணைப் பெயரெல்லாம் விளி கொள்ளும் வேளை, ஏகாரம் பெறும்.

(மரம் - மரமே, அணில் - அணிலே, நரி - நரியே)

-- விளிமரபு நிறைவு --

தமிழ் மொழி/யாப்பு இலக்கண வகுப்பு-22 ,22-04-2026
தொல்:சொல்: வேற்றுமையியல் -தொடர்ச்சி

ஐயம் தெளிதல்